1978 மார்ச் 15]

கேள்விக்கு போகும்போது தாழை மு. கருணநிதி உட்கார்ந்து கொண்டே பேசுவது நல்லதல்ல. நான் ஒவ்வொரு கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் சந்தர்ப்பம் தருகிறேன். அது தாழை கருணநிதியா அல்லது வேறு யாரோ என்பதல்ல. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வாய்ப்பு தந்திருக்கிறேன். அவர்கள்தான் கேட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இருபது பேர்கள் இருக்கிறார்கள், இருபது பேர்களும் இப்படி கேட்க ஆரம்பித்தால் என்னவாகும்? கேள்வி எண். 508.

ஸ்டாம்பு வெண்டர்கள் சங்கத்தின் முறையீடு.

*508—வினு திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா?

வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலூக்கா ஸ்டாம்பு வெண்டர்கள் சங்கத்தின் சார்பில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு 20–7–1977-ந் தேதி அன்று அனுப்பப்பட்ட மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மனுவில் உள்ள கோரிக்கைகள் வருவாய் வாரியத்தை கலந்தாலோசித்து பரிசீலிக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஏற்கனவே அவர்கள் எந்தளவிற்கு கமிஷன் பெற்றுக் கொண்டிருந்தார்கள்? அது எந்த ஆண்டில் பாதியாகக் குறைக்கப்பட்டது என்பதை அறிவிக்கமுடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1962-ம் ஆண்டுக்கு முன்பு ஒரு விதமான விகிதம் இருந்தது. அதற்குப் பிறகு அதைப் பற்றி ஆய்ந்து 1965ல் இருந்து புதிய விகிதங்கள் கொண்டு வரப்பட்டன. இந்தப் புதிய விகிதங்களை எதிர்த்து அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போனார்கள். ஹைகோர்ட்டில், இது செல்லாது அதற்கு ஒரு சட்ட திருத்தம் தேவை என்று குறிப்பிட்டார்கள். சட்டத் திருத்தமும் கொண்டுவரப்பட்டு அதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதையும் எதிர்த்து உயர்நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். இருப்பினும் அவர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி வருவாய் வாரியம் பரிந்துரை செய்து வருகிறது. ஏற்கனவே சென்னையைப் பொறுத்த வரையில் 3 சதவிகிதம் என்று இருந்தது. இப்போது எல்லாயிடங்களுக்கும் $1\frac{1}{2}$ சதவிகிதம் என்று ஆகிறது. அதே போல் ஒவ்வொன்றுக்கும் ஷெட்யூல் இருக்கிறது. உறுப்பினர்கள் அவர்களுக்குத் தேவைப்பட்டால் அதை அவையில் வைக்கலாம்.

[1978 மார்ச் 15

திரு. வி. கே. கோதண்டராமன் : ஒரு பக்கம் விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறது. இப்போது ஸ்டாம்ப் ஒன்றுக்கு பத்து மடங்கு விலை உயர்ந்து விட்டது. இந்நிலையில் ஏற்கனவே வாங்கிக் கொண்டிருந்த கமிஷன் பாதியாக ஆக்கப்பட்டு இன்னும் பரிசீலனையில் இருந்து கொண்டு வருகிறது என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலையிருக்குமானால் அவர்கள் உண்மையில் பாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதால் அவர்கள் தொடர்ந்து நீதி ஸ்தலங்களுக்குப் போயிருக்கிறார்கள், அமைச்சர் அவர்களிடமும் வந்திருக்கிறார்கள். ஆகவே விரைவில் அதற்கு தீர்வு காணக் கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாதிக்கப்பட்டார்கள் என்று சொல்வது சரிஅல்ல. முத்திரை வரி பொதுவாக அதிகரித்துள்ளது. எனவே, அதன் விளைவாக முன்பிருந்ததை விட அதே கொடுக்கல் வாங்கலுக்கு அதிகப்படியான கமிஷன் இப்போது கட்டப்படுகிறது. ஆகவே, பாதிக்கப்பட்டார்கள் என்று சொல்வது சரியல்ல. ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் இது சம்பந்தமாக வருவாய் துறை வாரியம் பரிசீலித்து வருவதால் விரைவில் அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.

திரு. துரை முத்துசாமி : ஸ்டாம்ப் வெண்டர்களுக்கு விற்பதற்கு அனுமதி கொடுக்கிறபோது படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற வகையிலும், கிராமங்களில் உள்ள கர்ணம், மணியக்காரர் இவர்களுக்கும் கொடுக்கிற மாதிரி இந்த அரசாங்கத்திற்கு ஏதாவது திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. ரா. மார்க்கபந்து : தி. மு. க. அரசு இருந்த போது ஸ்டாம்ப் வெண்டர்களுக்கு கமிஷன்களை குறைப்பதற்கு உத்தரவு போடப்பட்டது. பின்னால் அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போனதின் காரணமாக அரசின் உத்தரவு ரத்து செய்யப்பட்டது. இப்போது அந்த பழைய உத்தரவு தான் இருந்து வருகிறதா, ஏனென்றால் இதுவரை புதிய உத்தரவின் படி கமிஷன் கொடுப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, வேறு ஏதாவது ஒரு உத்தரவை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல், 1965-ம் ஆண்டு திருத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 1968-ம் ஆண்டிலேயே அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றார்கள். உயர் நீதிமன்றத்தில் இது சட்ட திருத்தத்தின் மூலம் தான் கொண்டு வர முடியும் என்று தெரிவித்தார்கள் அதற்குப் பிறகு 1975 அக்டோபர் திங்களில் சட்ட மன்றத்தின் இரு

1978 மார்ச் 15]

சபைகளிலும் திருத்தம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 1976 மார்ச் திங்களில் சட்டமாக ஆக்கப்பட்டது. பின்னுல் 1976 மார்ச் திங்களில் இது வெளியிடப்பட்டது. பின்னுல் இதன் மீது ரிட் மனுக்கள் தாக்கப்பட்டன. அவை இப்போது உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளன.

தமிழ் நாட்டுக்குக் கேரளத்திலிருந்து தண்ணீர்.

*568—வினு. திரு. வி.கே. கோதண்டராமன்
திரு. எஸ்.ஜே. இராமசாமி
திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1977 செப்டம்பர் 23, 24 தேதிகளில் கேரளத் தண்ணீர் விஷயமாக பிரதம மந்திரி முன்னிலையில் கேரள முதல் அமைச்சரும் தமிழ்நாடு முதல் அமைச்சரும் பேச்சு வார்த்தை நடத்திஞர்களா ?

(ஆ) அதன் முடிவு யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ் நாடு கேரள மாநிலங்களுக்கு இடையே ஏற்கெனவே ஏற்பட்டுள்ள உடன்படிக்கைகளுக்கு உட்படாத மேற்கு நோக்கி பாயும் நதிகளை திசை திருப்பி விடுவதற்கான சாத்தியக் கூறுகளை, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தொழில் நுட்ப குழு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவாகியுள்ளது.

*569—வினு. திரு. என். கிட்டப்பா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் : கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கேரள மேற்குப் பகுதி தண்ணீரை தமிழ் நாட்டுக்கு கொண்டு வருவது குறித்து, கேரளா, தமிழ்நாடு, மத்திய அரசு பொறியாளர்கள் கூடிப்பேசிஞர்களா ?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினுவுக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS